| | | |
|---|---|---|
| **O.S No.** | **:** | **191/2016** |
| **DATE** | **:** | **11.11.2025** |
| **பெயர்** | : | **கருணாமூர்த்தி** |
| **தந்தை பெயர்** | : | **டேனியல்** |

**வாதி தரப்பு பி.வா. சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. எனக்கு 25.05.1989ல் சைதாப்பேட்டையில் திருமணம் நடைபெற்றது. எனது திருமணத்திற்கு எனது பெற்றோர் மற்றும் உடன் பிறந்தவர்கள் வரவில்லை. எனது திருமணத்திற்கு முன்பே நான் சென்னையில் குடியேறிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 30 வருடங்களாக அவலூர் கிராமத்தில் இல்லை, வெளியூரில் தான் தங்கியிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அசல் வழக்கு எண் 115/2009 என்ற வழக்கை மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் முதல் நிலை தீர்ப்பு 16.07.2018 அன்று தீர்ப்பானது அது வீட்டு மனை சம்மந்தமானது. அந்த வழக்கில் நான் நான்கு அட்டவணைகளை குறிப்பிட்டுள்ளேன். அவை 145/2 15 செண்ட். ஆனால் வழக்கில் 3 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5. அம்பேத்கர் நகரில் அரசு கொடுத்த வீட்டு மனையின் சர்வே எண் 25, அதன் வீஸ்தீரனம் 25 அடி. அந்த வழக்கில் 4வது அயிட்டமாக உள்ள சர்வே எண் 496/1பி12 சொத்து தான் இந்த வழக்கின் தாவா சொத்து. அதன் விஸ்தீரனம் 1ஏக்கர் 74 செண்ட். பாகப்பிரிவினை வழக்கில் எங்களுக்கு 35 செண்ட் தான் சொந்தம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அது பாகப்பிரிவினை வழக்கு. பாகப்பிரிவினை வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணையின் படி சர்வே எண் 496/1பி12 ல் 35 செண்ட்டில் 7ல் ஒரு பாகம் தான் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பாணையை நான் படித்து பார்த்துள்ளேன். சாட்சியிடம் பி.வா.சா.ஆ.1 தீர்ப்பாணை காண்பிக்கப்பட்டது.

அந்த தீர்ப்பின்படி 35 செண்ட்டில் 7ல் 1 பாகம் தான் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த 7ல் 1 பாகத்தை பிரித்துக் கொடுக்க சொல்லி இறுதி நிலை தீர்ப்பாணைக்கு மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, எனது பங்கில் பயிர் வைத்து வருகிறேன்.

6. பாகப்பிரிவினை வழக்கில் எனது சகோதரி மகாலட்சுமி ஆஜராகினார். எனது தம்பி கங்காதரன் தனியாக அந்த வழக்கில் பதில் தாக்கல் செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் தாக்கல் செய்த பதிலில் நான் 30 வருடங்களுக்கு முன்பே ஊரை விட்டு சென்றுவிட்டேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. அவர்கள் தாக்கல் செய்த பதிலை நான் படித்து தெரிந்து கொள்ளவில்லை. முதல் நிலை தீர்ப்பாணையில் உள்ள விவரங்களை நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை.

7. வாதி தாக்கல் செய்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை. 2005ல் எனது உடன் பிறந்தவர்கள் மற்றும் மாணிக்கத்தின் வாரிசுதாரர்கள் மற்ற உரிமையாளர்களும் சேர்ந்து சேகர் என்பவருக்கு பவர் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பவரின் அடிப்படையில் வாங்க, விற்க அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. பவரில் உள்ள விவரங்களை நான் தெரிந்து கொண்டேன். பவரின் அடிப்படையில் தான் சேகர் என்பவர் வாதிக்கு 2006ல் கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 2006ல் ஏற்பட்ட கிரையம் செல்லாது என்று நான் வாதிக்கு 09.01.2009ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. சாட்சியிடம் அவர் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் காண்பிக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பு பற்றி அதில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது ஆனால் எனக்கு ஞாபகமில்லை. 2006ல் ஏற்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு எண் 115/2009ல் அந்த பரிகாரம்

கோரியுள்ளேன். நான் சொல்வது போல் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல.

8. தாவா சொத்தில் சுவாதினத்தில் உள்ளதற்கான ஆவணம் உள்ளது ஆனால் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வாதி தான் தாவா சொத்தில் சுவாதினத்தில் இருந்து பயிர் வைத்து வருகிறார் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொன்னால் சரிதான். மாணிக்கத்திற்கு அரிஜன் நல திட்டத்தின் கீழ் நிலம் ஒதுக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. மாணிக்கம் இறந்ததற்கு பிறகு அவர் வாரிசுகளுக்கிடையே ஏற்பாடு செய்யப்பட்டதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அது என்ன ஏற்பாடு என்று தெரியவில்லை. எனது தகப்பனார் 1985ல் இறந்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் அவர் 2005ல் இறந்தார். நான் கோருவது போல் தாவா கிராமத்தில் வசித்திருந்தால் அவர் எப்போது இறந்திருப்பார் என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனது தந்தையின் ஈமச்சடங்குகளில் நான் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. நான் 30 வருடங்களுக்கு முன்பே ஊரை விட்டு சென்றுவிட்டதால் தாவா சொத்தின் கூட்டு சுவாதினத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தையின் வாரிசுகளுக்கிடையே கூட்டு பட்டா எதுவும் இல்லை. தற்போது வரை வாதியின் பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 16.07.2018 முதல் நிலை தீர்ப்பாணைக்கு பிறகு தான் வாதியின் சுவாதினத்தை தடுப்பதற்காக 10.08.2016ல் நான் அவருக்கு தொல்லை கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தொல்லை செய்ததால் தான் நிரந்தர உறுத்துக் கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆகவே தாவாப்படி தீர்ப்பாக

வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.வருவாய் ஆவணங்கள் அனைத்தும் வாதியின் பெயரில் உள்ளது நான் தாவா சொத்தில் சுவாதினத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.